(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 66.]**

# பாராளுமன்றத்தின் ஒழுங்குப் பத்திரம்

## 2025 ஜூலை 09, புதன்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

614/2025

கௌரவ (திருமதி) சட்டத்தரணி சமிந்திரானி கிரிஎல்லே,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கண்டி தேசிய வைத்தியசாலைக்குச் சொந்தமான மொத்த நிலப்பரப்பு எவ்வளவென்பதையும்;

(ii) பல்வேறு அரச நிறுவனங்கள் மற்றும் பல்வேறு தனிநபர்களால் இன்றளவில் மேற்படி வைத்தியசாலைக்குச் சொந்தமான காணிகள் சட்டவிரோதமாக கைப்பற்றப்பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(iii) மேற்படி நிலைமை வைத்தியசாலையின் எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குத் தடையாக அமைவதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iv) அவ்வாறாயின், அது குறித்து எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

637/2025

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி,— கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் தற்போதுவரை இலங்கையின் மீன் அறுவடை ஆண்டுவாரியாக வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) அக்காலப்பகுதியில் மீன் ஏற்றுமதியின் மூலம் ஈட்டிய வருமானம் ஆண்டுவாரியாக வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி காலப்பகுதியில் இலங்கைக்கு மீன் இறக்குமதி செய்வதற்காக செலவிடப்பட்ட பணத் தொகை ஆண்டுவாரியாக வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iv) இலங்கையின் மீன் அறுவடையை அதிகரிப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

651/2025

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன,— நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஜா-எல பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தில் ராகம - பேரலந்த வாவி உள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி வாவி ஒரு 'நிலத்தோற்றக் கருத்திட்டமாக' அபிவிருத்தி செய்யப்படுவதற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட திகதி யாது என்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்தின் உத்தேச நோக்கங்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி கருத்திட்டத்திற்கு இதுவரை செலவு செய்யப்பட்டுள்ள பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

(v) மேற்படி கருத்திட்டம் தற்போது நிறுத்தப்பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(vi) அவ்வாறாயின், அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

712/2025

கௌரவ முஜிபுர் ரஹுமான்,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இடம்பெற்ற மோசடிகள், ஊழல்கள் மற்றும் கொலைகள் தொடர்பாக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவால் அரசியல்வாதிகள் மற்றும் அரச அலுவலர்களுக்கு எதிராக 2020 ஆம் ஆண்டு தொடக்கம் 2024 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) இன்றளவில் அவற்றுள் எத்தனை வழக்குகள் நிறைவடைந்துள்ளன என்பதையும்;

(iii) அவ்வழக்குகள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள வழக்குகளில் மீளப் பெறப்பட்டுள்ள வழக்குகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(v) அவ்வழக்குகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

950/2025

கௌரவ றஜீவன் ஜெயசந்திரமூர்த்தி,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) யாழ்ப்பாண மாவட்டத்தின் வேலணை பிரதேச செயலகப் பிரிவில் நிறுவப்பட்டுள்ள தபால் அலுவலகத்துக்கு நிரந்தர கட்டடமொன்று இல்லாத காரணத்தால் மேற்படி தபால் அலுவலகம் தற்காலிக கட்டடமொன்றில் இயங்குகின்றதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி தபால் அலுவலகத்துக்கு நிரந்தர கட்டடமொன்றை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(iii) அக் கட்டடம் எக்காலகட்டத்தில் நிர்மாணிக்கப்படுமென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

1.

பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர்,— இறப்பர் கட்டுப்பாடு (திருத்தம்),— இறப்பர் கட்டுப்பாட்டுச் சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

2.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வுகள் (இல. 1),— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 12.30 மணி வரையும் மற்றும் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 5.30 மணி வரையும் இருக்குமாக. மு.ப. 11.30 மணிக்கு பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8(5) தொழிற்படுமாக. பி.ப. 5.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை ஒத்திவைப்பாராக.

3.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வுகள் (இல. 2),— இப்பாராளுமன்றம் இன்று அதன் அமர்வு கலையும் போது 2025, ஜூலை 11 ஆம் திகதி, வெள்ளிக்கிழமை மு.ப. 9.30 மணி வரை ஒத்திவைக்கப்படுமாக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

வேலையாட்களின் வரவுசெலவுத்திட்ட நிவாரணப்படி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*2.

வேலையாளர்களின் வரவுசெலவுத்திட்ட நிவாரணப்படி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*3.

வேலையாளர்களின் தேசிய குறைந்தபட்ச வேதனம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*4.

கம்பெனிகள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*5.

இலங்கை மின்சாரம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*6.

பணச்சூதாட்டத்தை ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*7.

நாணய மாற்றுண்டியல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*8.

சமுர்த்தி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*9.

தனிப்பட்ட தரவுப் பாதுகாப்பு (திருத்தச்) சட்டமூலம் — குழு ஆய்நிலை.

*10.

பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் உள்ள சித்திரவதைக்கூடங்கள், சட்டரீதியற்ற தடுப்பு நிலையங்களை நிறுவுதல், பராமரித்தல் ஆகியவற்றை விசாரணை செய்த ஆணைக்குழுவின் அறிக்கை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2025 ஏப்ரல் 10 ) ,— "2025 மார்ச் 14 ஆம் திகதியன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் உள்ள சித்திரவதைக்கூடங்கள், சட்டரீதியற்ற தடுப்பு நிலையங்களை நிறுவுதல், பராமரித்தல் ஆகியவற்றை விசாரணை செய்த ஆணைக்குழுவின் அறிக்கை பாராளுமன்றத்தினால் பரிசீலனை செய்யப்படுமாக." எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

*** அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**